








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஏப்ரல் - 2019

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஏப்ரல் - 04.04.2019


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- முக்கிய தினங்கள்
- புத்தகங்கள்












# தமிழக நிகழ்வுகள்

- தமிழக லோக் ஆயுக்தாவின் முதல் தலைவராக **"பி.தேவதாஸ்"** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் தமிழக லோக் ஆயுக்தாவில் **நான்கு உறுப்பினர்களும்** நியமிக்கப்பட்டுள்ளனர்.
  - 1. கே. ஜெயபாலன்
  - 2. ஆர். கிருஷ்ண மூர்த்தி
  - இவர்கள் இருவரும் நீதித்துறை சார்ந்த உறுப்பினர்கள் ஆவர்
  - 3. எம். இராஜராம்
  - 4. கே. ஆறுமுகம்
  - இவர்கள் இருவரும் நீதித்துறை சாராத உறுப்பினர்கள் ஆவர்.
- குறிப்பு:
  - லோக் ஆயுக்தா சட்டம் 2013ல் கொண்டு வரப்பட்டது.
  - தமிழக சட்டப் பேரவையில் 2018 ஜூலை 9ல் நிறைவேற்றப்பட்டது.
  - **தமிழக லோக் ஆயுக்தா தேடுதல் குழுவின் தலைவராக கே. வெங்கட்ராமன் நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.**

We Shine Academy™

# இந்திய நிகழ்வுகள்

- இந்திய இராணுவமானது ஜம்மு காஷ்மீர் மாநிலம் சோக்லமேஸ்வர் கிராமத்தில் சிந்து நதியின் குறுக்கே **260 அடி நீளமுள்ள தொங்கு பாலத்தை 40 நாட்களில் அமைத்து சாதனைப் படைத்துள்ளது.**
  - **இதற்கு மைத்ரி பாலம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.**

- ஒடிசாவைச் சேர்ந்த **"கந்தமால் ஹால்டி"** **(Kandhamal *Haldi*)** என்ற மஞ்சள் வகைக்கு, வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அறிவுசார் சொத்து இந்தியாவின் புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது.
  - சிறந்த மருத்துவ குணங்களை பெற்றதற்காக இப்புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

- வாக்காளர்களுக்காக கல்வி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சமுதாய வானொலிகளுக்கு பயிற்சி வழங்குவதற்காக இந்திய தேர்தல் ஆணையமானது **"SVEEP" (Systematic Voters Education and Electoral Participation**

**Program)** என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **உலக ஸ்குவாஷ்** வீரர்களின் தரவரிசைப் பட்டியலை உலக ஸ்குவாஷ் சம்மேளனம் வெளியிட்டுள்ளது. இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் உலக சாம்பியனான **எகிப்தைச் சேர்ந்த அலி பராக் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.**
  - **இந்தியாவின் சவுரவ் கோஷல் 10வது இடத்தைப் பிடித்துள்ளார்.** இதன் மூலம் முதல் 10 இடங்களில் இடம்பெற்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- சென்னை இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் **(IIT – Madras)** குழுவானது **பெட்ரோலியத்தின் கழிவுப் பொருளான டொலுவினை பென்சாயிக் அமிலாக மாற்றியமைத்துள்ளது.**
  - இந்த பென்சாயிக் அமிலமானது, உணவு பதப்படுத்தல் மற்றும் பூஞ்சை, பாக்டீரியா தொற்றிற்கு மருந்தாகவும் பயன்படுகிறது.

## முக்கிய தினங்கள்

- **சர்வதேச குழந்தைகளின் புத்தக தினம் - ஏப்ரல் 02 (International Children's Book day)**
  - குழந்தைகளுக்காகத் தங்கள் வாழ்வை அர்ப்பணித்த டென்மார்க்கைச் சேர்ந்த **ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆன்டர்சனின்** நினைவாகவும், வாசிப்பு பழக்கத்தின் இன்றியமையாமையைக் குழந்தைகள் உணரச் செய்வதற்காகவும் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 02ம் தேதி – சர்வதேச குழந்தைகளின் புத்தக தினம் கொண்டாடப்படுகிறது.

We Shine Academy TM

# புத்தகங்கள்

- **Modi Again : Why Modi is right for India, An Ex-Communist Manifesto** என்ற புத்தகமானது அப்பாஸ் மால்டாஹுயர் என்பவரால் எழுதப்பட்டு கருடா பிராசன் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

We Shine Academy™